இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17.03.2026

# வெல்வோம் ஒன்றாக!

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாக நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் மார்ச் 30- ஆம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்க இருக்கிறது. வேட்புமனு தாக்கல் செய்ய ஏப்ரல் 6- ஆம் தேதி கடைசி நாள். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஏப்ரல் 7-ஆம் தேதி நடைபெறும். வேட்புமனுக்களை திரும்பப் பெற ஏப்ரல் 9-ஆம் தேதி கடைசி நாளாகும். இதைத் தொடர்ந்து ஏப்ரல் 23 ஆம் நாளன்று வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

**கேரளா, அசாம், புதுச்சேரிக்கு ஏப்ரல் 9-ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. மேற்கு வங்கத்திற்கு ஏப்ரல் 23 மற்றும் 29-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.**

**தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில தேர்தல் வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெறுகிறது. மே முதல் வாரத்தில் மீண்டும் முதலமைச்சராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்க இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அத்தகைய முடிவெடுத்தே வாக்குப் பதிவு நாளுக்குக் காத்திருக்கிறார்கள்.**

ஐம்பது ஆண்டு காலப் பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 14 வயதில் இருந்து தமிழ் மக்களுக்காக உழைத்து வருகிறார். தமிழ்நாட்டின் உரிமைக்காக தனது வாழ்க்கையை ஒப்படைத்துள்ளார்.

**கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. அமைப்பாளராக, ஆயிரம் விளக்கு பகுதிக் கழகப் பிரதிநிதியாக, இளைஞரணி அமைப்பாளராக, இளைஞரணிச் செயலாளராக, துணைப் பொதுச்செயலாளராக, பொருளாளராக, செயல் தலைவராக, இன்று கழகத் தலைவராக இயங்கி வருகிறார்.**

**சென்னை மாநகரத்தின் மேயராக - சட்டமன்ற உறுப்பினராக - மாநிலத்தின் அமைச்சராக - துணை முதலமைச்சராக - எதிர்க்கட்சித் தலைவராக - இன்று முதலமைச்சராக உயர்ந்து நிற்கிறார். இத்தகைய அரசியல் வரலாறும், வளர்ச்சியும், தொண்டும், வாழ்க்கையும் முதலமைச்சராக நினைக்கும் மற்ற யாருக்காவது உண்டா என்றால் கிடையாது. இதில் பாதிகூட கிடையாது. கால் பங்கு கூட இருக்காது. இத்தகைய உழைப்பின் அடையாளமாக இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**

**அவர் தலைமைப் பொறுப்புக்கு வந்த பிறகு 2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற அனைத்துத் தேர்தலிலும் வென்று காட்டி இருக்கிறார். எதிரிகளுக்குத் தோல்வியையே பரிசாகக் கொடுத்துள்ளார். கழகத் தலைவராக திராவிட முன்னேற்றக் கழகத்தை சட்டமன்றத் தேர்தலிலும் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற வைத்தது அவரது வெல்லும் வரலாறு ஆகும்.**

2021 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அவர் அமைத்த 'திராவிட மாடல்' ஆட்சியானது தமிழ்நாட்டை அனைத்து வகையிலும், அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக ஆக்கிவிட்டது.

"2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக வெற்றி பெற்ற போது ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், இன்னொரு பக்கம் எனக்கு கவலையும் இருந்தது. அதனை நான் மறைக்க விரும்பவில்லை. இந்தப் பொறுப்பை நான் எப்படி செய்யப் போகிறேன் –

வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா – மக்கள் விரும்பும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா – மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா – என்ற கவலைதான் எனக்கு இருந்தது.

**முந்தைய பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து வகையிலும் - அனைத்துத் துறைகளிலும் மிக மோசமான பின்னடைவைச் சந்தித்து - மோசமான நிலையை அடைந்திருந்தது. அதனைச் சரி செய்தாக வேண்டும். நமக்கு மேலே இருக்கும் ஒன்றிய அரசு ஒத்துழைக்காத ஓரவஞ்சனை அரசாக இருந்தது.**

**இந்த இரண்டு நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டும் என்பதுதான் எனது கவலைக்கு மிக முக்கியமான காரணங்கள் ஆகும். அத்தகைய சூழலில் தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். அதனால்தான் கவலை கொண்டவனாக நான் இருந்தேன். ஆனால் இப்போது ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் நான் இப்போது சொல்கிறேன்... நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எனவே நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்"** என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் துணிச்சல் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தான் உண்டு.

**கடந்த நிதியாண்டில் 11.19 விழுக்காடு என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எட்டி இருக்கிறது என்பதுதான் 'திராவிட மாடல்' ஆட்சியின் மகத்தான சாதனையாகும். மகுடம் என்று சொல்லத்தக்க சாதனை ஆகும்.**

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்நாடு இத்தகைய வளர்ச்சியை அடைவது இதுவே முதல்முறை. இந்தியாவில் எந்த மாநிலமும் இத்தகைய வளர்ச்சியைப் பெறவில்லை. ஒன்றிய அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் வளர்ச்சி புள்ளி விவரங்கள் வெளியாகி இருக்கிறது. அதில்தான் இது இருக்கிறது. இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2024 -25 ஆகிய ஆண்டில் 6.5 விழுக்காடாக இருக்கிறது. தற்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாக உயர்ந்து விட்டது. இதுதான் தமிழ்நாட்டின் வெற்றியாகும். இதைச் சொல்வது ஒன்றிய அரசு தான். நாம் அல்ல.

**ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்தது மட்டுமல்ல; தனது திட்டங்களின் பயனை ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொண்டு சேர்த்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள். எல்லாத் திட்டமும் ஏதோ ஒரு வகையில் மக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துவிட்டது. அதனால்தான் அவர் செல்லும் இடமெல்லாம் மக்கள் வெள்ளத்தில் நீந்திச் செல்கிறார். சமூக வலைதளத்தில் பேட்டி அளிக்கும் பொதுமக்கள் அனைவரும், 'மு.க.ஸ்டாலின் தான் முதலமைச்சராக வரணும்' என்று சொல்கிறார்கள். 'நான் போன முறை அவருக்கு வாக்களிக்கவில்லை, இந்த தடவை அவருக்குத் தான் வாக்கு' என்று உண்மை உணர்வோடு பேட்டி அளித்து வருகிறார்கள்.**

**ஐம்பது ஆண்டு கால பொதுவாழ்க்கை - அரை நூற்றாண்டு காலமாக தமிழ்நாட்டின் உரிமைக்காகப் போராடியது - தனது ஆளுமைத் திறத்தால் தொடர் வெற்றிகள் - பதினைந்து ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனைகளை ஐந்து ஆண்டுகளில் செய்து காட்டிய நிர்வாகத் திறன் - அனைத்து மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றின் அடையாளமாக இருக்கும் மாண்புமிகு மு.க.ஸ்டாலினையே மீண்டும் முதலமைச்சர் ஆக்குவோம் என்று மக்கள் உறுதி எடுத்துவிட்டார்கள். அதற்காக உழைப்போம்.**

## பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு அறிவிப்புகள்!

# முதல்வருக்கு டி.என்.பி.எம்.ஆர்.யூ. நன்றி!

## மாநிலத் தலைவர் மு.சிவதமிழவன் அறிக்கை!

சென்னை, மார்ச் 17 –

தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் நிறுவன தலைவர் டாக்டர் மு.சிவதமிழவன் மற்றும் பொதுச் செயலாளர் சி.பி.ராஜன், பொருளாளர் ஏ.சேகர் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–

தமிழ்நாட்டின் மக்களின் மீதும், தமிழ் மொழி, இனம் மற்றும் சுயமரியாதை மீதும் என்றைக்கும் அக்கறை கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் பத்திரிக்கை துறையினர்கள் மீது என்றைக்கும் அக்கறைக் கொண்ட முதல்வராக, பத்திரிக்கை மற்றும் ஊடக துறையினர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அவர்களை காத்து வருகிறார்.

தற்போது இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக பத்திரிகையாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு, வீட்டுமனை, ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பல அறிவிப்புகளை தந்து பத்திரிகையாளர்கள் வாழ்வில் மீண்டும் ஒளி ஏற்றி இருக்கிறார்.

தமிழ்நாட்டின் அனைத்து தரப்பு மக்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியை போற்றி வாழ்த்துவதைப் போலவே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினரும் வாழ்த்தி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த திட்டங்களை தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நல்ஆட்சி தொடர்ந்து, பத்திரிகையாளர்கள் நலன்களை பேணும் அரசாக தொடரும் என்று தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் சார்பில் வாழ்த்துகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.3.2026) முகாம் அலுவலகத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.3.2026) அவரது இல்லத்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சுப்புரெத்தினம், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் ஸ்ரீ மீனாட்சி, மருமகன் குலோத்துங்கன் மற்றும் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி துர்கா ஸ்டாலின் உடனிருந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.3.2026) அவரது இல்லத்தில், இந்திய கிரிக்கெட் வீரர்கள் வருண் சக்கரவர்த்தி மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் இந்திய அணி T20 உலகப் கோப்பை போட்டியில் வெற்றி பெற்றதையொட்டி சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் அவ்விரு வீரர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்து, அய்யன் திருவள்ளுவர் சிலையை நினைவுப் பரிசாக வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் சீனிவாசராஜ், முன்னாள் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி ஆகியோர் உடனிருந்தனர்.

## வகுப்புவாத பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை வீழ்த்திட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்கு

# காங்கிரஸ் கட்சியினர் ஓய்வறியாமல் உழைத்திடுவீர்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 17 – "வகுப்புவாத பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணியை வீழ்த்திட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களின் வெற்றிக்கு காங்கிரஸ் கட்சியினர் ஓய்வறியாமல் உழைத்திட வேண்டும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–

தமிழ்நாட்டிற்கான சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23 அன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் தேர்தலுக்கு 36 நாட்கள் மட்டும்தான் எஞ்சியுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தி.மு.க., தலைமையிலான காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமைக்கப்பட்டு தொகுதி பங்கீடும் முடிவு பெறுகிற நிலையில் உள்ளது.

கடந்த 2004 மக்களவை தேர்தலில் உருவான இக்கூட்டணி 2026 வரை, நடைபெற்ற 2014 மக்களவை தேர்தலை தவிர, அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் மதச்சார்பற்ற கொள்கையில் நம்பிக்கையுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இதில், 2004, 2009, 2019, 2024 ஆகிய நான்கு மக்களவை தேர்தல்களிலும் அமோக வெற்றி பெற்றிருக்கிறோம். 2006, 2021 சட்டமன்றத் தேர்தல்களிலும் மகத்தான வெற்றியை பெற்றிருக்கிறோம். கடந்த 2021 முதல் ஏறத்தாழ நான்கரை ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் மக்கள் நலன்சார்ந்த நல்லாட்சி வழங்கப்பட்டு வருகிறது.

2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கொடுத்த மொத்த வாக்குறுதிகள் 505. இதில் 450க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி நிறைவேற்றி சாதனை படைத்திருக்கிறது. மீதமுள்ள வாக்குறுதிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒத்துழைக்க மறுத்த காரணத்தினால் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறதே தவிர, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, வாக்குறுதி கொடுக்காத காலை உணவு திட்டம் போன்ற எத்தனையோ திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டு மக்களிடையே முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நன்மதிப்பும், நம்பிக்கையும் பலமடங்கு கூடியிருக்கிறது. அவர் எட்டியிருக்கிற உயரத்தை எதிர்கட்சிகளால் நெருங்க முடியாத அளவிற்கு உயர்ந்திருக்கிறார். அதற்குக் காரணம் தமது கடுமையான உழைப்பின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, நல்லாட்சியை வழங்கியிருக்கிறார்.

### பிரமிக்க வைக்கிற வளர்ச்சி!

தமிழ்நாட்டின் வளர்ச்சியை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, அனைவரையும் பிரமிக்க வைக்கிற வகையில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவிகிதமாகும். நாட்டின் சராசரி வளர்ச்சியை விட இது இருமடங்கு அதிகமாகும். தமிழ்நாட்டு மக்களின் தனிநபர் வருமானம் ரூபாய் 3.62 லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆனால், தேசிய சராசரி வருமானம் ரூபாய் 2.05 லட்சமாக குறைவான



நிலையில் தான் இருக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தை விட, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருப்பது ஒரு மகத்தான சாதனையாகும். மேலும், மாநில பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு மகாராஷ்டிராவில் ரூபாய் 49 லட்சம் கோடியும், அடுத்த நிலையில் தமிழ்நாடு ரூபாய் 35 லட்சம் கோடி என்கிற நிலையில் இந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது.

தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழக மக்கள் மனம் திறந்து பாராட்டி மகிழ்ந்து வருகிறார்கள். அவர் சுற்றுப் பயணம் செய்கிற இடங்களில் எல்லாம் மக்கள் அன்பை பொழிகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சரின் திட்டங்களினால் பயனடைந்த மகளிர் அத்தனை பேரும் தமிழ்நாடு முதலமைச்சர் மீது அன்பை பொழிந்து ஆதரவை அளித்து வருகிறார்கள்.

### முதல்வரின் அரசியல் பேராண்மை!

இதைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, உள்துறை அமைச்சர் அமித்ஷாவை ஏவிவிட்டு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு எதிராக சாம, பேத, தான, தண்டங்களை பயன்படுத்தி வருகிறது. ஆனால், தமிழ்நாடு எப்பொழுதுமே தில்லிக்கு அவுட்ஆப் கண்ட்ரோல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கம்பிரமாக உரத்தக் குரலில் முழங்கி வருகிறார். இது அவரது அரசியல் பேராண்மையை வெளிப்படுத்துகிறது. இதனால் தான் தமிழ்நாட்டின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை பொறுத்தவரை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கட்டுக்கோப்புடன் செயல்பட்டு வருகிறோம். கூட்டணி கட்சிகளிடையேயான தொகுதிப் பங்கீடு ஓரிரு நாளில் நிறைவு பெறும். இக்கூட்டணியில் 20க்கும் மேற்பட்ட கட்சிகள் இருக்கின்றன. ஆனால், அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் எத்தனை கட்சிகள் இருக்கின்றன என்று இதுவரை முழு விவரம் வெளிவரவில்லை. அங்கே குழப்பம் தான் அதிகரித்து வருகிறது. பா.ஜ.க.வை கொள்கை எதிரி என்று பிரகடனம் செய்த த.வெ.க., கூட்டணிக்கு வருமா என்று திரைமறைவு பேரங்கள், அச்சுறுத்தல்கள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை பொறுத்தவரை வெளிப்படைத்தன்மையோடு, ஒளிவு மறைவின்றி கூட்டணி கட்சிகள் ஒரே லட்சியத்துடன் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வரலாறு காணாத வளர்ச்சியை பெறச் செய்து மகத்தான சாதனைகளை படைத்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக அரசின் திட்டங்களால் பயனடைந்த கோடிக்கணக்கான பெண்கள் உள்ளிட்ட மக்களின் பேராதரவோடு மீண்டும் ஆட்சி அமைவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

நரேந்திர மோடியும், அமித்ஷாவும், எத்தனைமுறை தமிழ்நாட்டிற்கு வருகிறார்களோ, அத்தனை முறையும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு உரமாக அமைந்து மேலும் வெற்றிகளை குவிக்க வழிவகுக்கும் என்பதை உறுதியாக கூற விரும்புகிறேன். வகுப்புவாத சக்திகளின் கோயபல்ஸ் பிரச்சாரத்தை முறியடிக்க அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களும், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மற்றும் அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி ஆகியோர் தமிழ்நாட்டில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் போட்டியிடுகிறோம் என்ற உணர்வோடு, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து வேட்பாளர்களின் வெற்றிக்கு, வருகிற 36 நாட்களும் கண் துஞ்சாது, அயராது உழைத்து, வகுப்புவாத பா.ஜ.க.வை அ.தி.மு.க. கூட்டணி மூலம் தமிழ்நாட்டில் நுழைய விடாமல் தடுக்கின்ற மகத்தான களப் பணியில் ஓய்வறியாமல் உழைக்க காங்கிரஸ் கட்சியினரை அன்போடு அழைக்கிறேன்.

இவ்வாறு கு. செல்வப்பெருந்தகை தமது அறிக்கையில் கூறியுள்ளார்.